செய்தி வெளியீடு என்:25 நாள் 29.10.2011

# மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் விழிப்புணர்வு ரதம் மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் பார்வையிட்டார்

மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரச்சார ஊர்தி விளம்பர பணி மேற்கொண்டு வருகிறது.

மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி சென்னைக் குடிநீர் வாரியம் பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள், விளம்பரப் பலகைகள் மற்றும் வானொலி மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதன் பயனாக சென்னை மாநகரில் வணிக வளாகங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனியார் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தற்போது வடகிழக்குப் பருவமழை தொடங்கிய நிலையில், பொதுமக்களிடையே மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்தும், கட்டமைப்புகளைப் பராமரித்தல் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக விளம்பர ஊர்தி பிரச்சாரப் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த விளம்பர ஊர்தியில் மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரித்தல் குறித்து செயல் விளக்கங்கள் செய்து காட்டப்படுகின்றன.

இந்த வாகனம் சென்னையின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவுள்ளது.

சென்னை குடிநீர் வாரியத்தின் பகுதி 1–ல் உள்ள பழைய வண்ணாரப் பேட்டைப் பகுதியில் இந்த விளம்பர ஊர்தி பிரச்சாரப் பணியில் ஈடுபட்டிருந்த போது, அவ்வழியே நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக வருகை தந்த மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு டி.ஜெயகுமார் அவர்கள் இந்த விளம்பர ஊர்தியினைப் பார்வையிட்டு அதிகாரிகளிடம் இதுகுறித்து விளக்கங்களை கேட்டுத் தெரிந்து கொண்டார். பின்னர், அவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான இந்த மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை பொதுமக்கள் அனைவரும் செயல்படுத்திட வேண்டும் எனவும், அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த விளம்பர ஊர்தி சென்று பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்டுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

மேலும், ஒவ்வொரு பகுதிக்கும் இந்த விளம்பர ஊர்தி வருகை தரும்போது பொதுமக்கள் அனைவரும் இதனைப் பார்வையிட்டு பயன்பெறுமாறும் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் விளம்பர ஊர்தியினைப் பார்வையிடும்போது சென்னைக் குடிநீர் வாரிய பகுதி 1–ன் பொறியாளர் திரு பி. ராஜகோபால், உதவி செயற்பொறியாளர் திரு சக்திவேல், இளநிலைப் பொறியாளர் திரு சுந்தர் ஆகியோர் உடனிருந்தனர்.

மேற்கண்ட தகவலை சென்னைக் குடிநீர் வாரிய பகுதி – 1 பொறியாளர் திரு பி. இராஜகோபால் தெரிவித்துள்ளார்.

மக்கள் தொடர்பு மேலாளர்